# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் -4

## தேவனுடைய தெய்வீக திட்டம்

# முப்பெரும் காலப் பிரிவுகள்



## இரண்டாம் காலப் பிரிவு

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## முப்பெரும் காலப் பிரிவுகள்

## இரண்டாம் காலப் பிரிவு

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரசகோதரிகளே,



இவ்வகுப்பில் இரண்டாம் உலகம் பற்றி ஆராய்வோம். இரண்டாம் உலகம் நோவாவும் அவரது குடும்பத்தாருமாக மொத்தம் 8பேரைக்கொண்டு ஆரம்பித்தது. இந்த இரண்டாம் உலகம் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

1. முற்பிதாக்கள் யுகம் 2. யூதயுகம்
3. சுவிசேஷயுகம் (கிறிஸ்தவ யுகம்)

இந்த இரண்டாம் உலகத்தின் ஒவ்வொரு யுகத்தைக் குறித்தும் விரிவாய் ஆராய்வோம். ஆதியாகமம் 9:18,19ல், நோவாவின் மகன்கள் மூலம் மீண்டும் உலகில் மக்கள் பரம்பத் தொடங்கினார்கள் என்று வாசிக்கிறோம்.

அவருடைய மகன்கள் சேம், காம், யாப்பேத் ஆவர். இதில் யாப்பேத் மூத்தவர்(ஆதியாகமம் 10:21), இரண்டாவது மகன் சேம், கடைசி மகன் காம் ஆவார். ஆதியாகமம் 9:20,21ல், முதல் உலகத்தில் நடந்துகொண்டதுபோலவே இப்போதும் நோவா திராட்சத்தோட்டம் நாட்டி, திராட்ச ரசம் குடித்தார். ஆனால் தற்போது குடித்த திராட்ச ரசம் போதையை உண்டுபண்ணினதால், வெறிகொண்டு வஸ்திரம் விலகிப் படுத்திருந்தார்.




ஜலப்பிரளயத்தின்போது வானத்தின் தண்ணீர் மதகுகள் அல்லது வளையங்கள் பூமியின்மேல் திறந்து மழையாகப் பெய்து விட்டபடியால், தற்போது சூரியனின் வெப்பக் கதிர்கள் நேரடியாக பூமியைத் தாக்கத் தொடங்கியது. இதனால் முதல் உலகத்தின்போது கெடாமல் இருந்த திராட்ச ரசம் இப்போது வெகு சீக்கிரமாகப் புளித்து மதுபானமாக மாறிவிட்டது. ஆனால் இந்த சீதோஷ்ண நிலை மாற்றம் நோவாவுக்கு தெரியாததால் அவருக்கே தெரியாமல் போதைக்கு ஆளானார் என்பது புரிகிறது.

ஆதியாகமம் 9:22,23ல், நோவாவின் இளைய மகன் காம் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு தன் சகோதரருக்கு அறிவித்தான். ஆனால் சேமும், யாப்பேத்தும் தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணாமல் ஒரு வஸ்திரம் எடுத்து, பின்னிட்டுவந்து தகப்பனை மூடினார்கள் என வாசிக்கிறோம்.

வசனம் 24ல் நோவா வெறி தெளிந்து விழித்தபோது, மேற்சொன்ன நிகழ்ச்சிகள் காரணமாக நோவா தன் குமாரரிடத்தில் கூறிய ஆசீர்வாதம் மற்றும் சாபம் மூலமாக, தற்காலத்தில் வாழும் எல்லா ஜனங்களும் நோவாவின் எந்தெந்த குமாரர் மூலமாக வந்தார்கள் என சுலபமாக அறிந்துகொள்ளலாம்.

**ஆதியாகமம் 9:27**

‘யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார். அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான். கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்”.




இங்கு யாப்பேத் சேமுக்கும், கானானுக்கும் அதிபதியாயிருப்பது, யாப்பேத் தற்போதுள்ள ஐரோப்பியர்கள் அனைவருக்கும் தகப்பன். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் எல்லா ஐரோப்பிய தேசங்களிலுமுள்ள வெள்ளை இனமக்கள், உலகம் முழுவதும் ஆட்சிபுரிந்த ரோம சாம்ராஜ்யமும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் இதற்கு சில உதாரணங்கள்.

**ஆதியாகமம் 9:26**

‘சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்”

சேமுடைய சிறப்பம்சம் என்னவெனில், சேமின் சந்ததி கடவுள் பக்தியுள்ள சந்ததியாகும். இவர்களுக்கு கானான் அடிமையாயிருப்பதை கவனிக்கவும். பொதுவாக ஆசியா கண்டத்தில் தான் கடவுள்பக்தி நிறைந்த மக்கள் வாழ்கிறதை நாம் காண்கிறோம். உலகின் எல்லா மதங்களும் ஆசியாவிலிருந்து தான் தோன்றியுள்ளது(உதாரணமாக - யூத மதம், இஸ்லாமிய மதம், புத்த மதம்,



கிறிஸ்தவ மதம், ஜைன மதம் முதலியன).



சேமுடைய சந்ததி தற்போதுள்ள இந்தோனேஷியா, மலேசியா, ஜப்பான் சீனா, அரேபியா தேசங்கள், இஸ்ரயேல் தேசங்களில் வசிப்பவர்களாவார்கள்.

ஆதியாகமம் 9:25ல்,’கானான் சபிக்கப்பட்டவன். தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான். இங்கு காம் செய்த தவறுக்காக நோவா காமை சபிக்காமல், காமுடைய குமாரன் கானானை(ஆதியாகமம் 9:18) சபித்தார்

தற்கால இந்தியர் யாரெனில், முற்காலத்தில் தென்னிந்தியாவில் ஆதிதிராவிடர் எனும் காமின் சந்ததியுடன், ஐரோப்பாவிலிருந்து வந்த ஆரியரும்(யாப்பேத் சந்ததி), மேற்கு ஆசியாவிலிருந்நது வந்த சேமின் சந்ததியாகிய முகலாயரும் கலந்து, தற்போது கலப்பின மக்களாக இருக்கிறோம். நோவாவின் மூன்று குமாரரின் கலப்பினம்தான் தற்கால இந்தியர் ஆவர். ஆகவேதான் இவர்கள் ஆளுகைக்கும் முன்வருவதில்லை, அடிமையாவதற்கும் தயாரில்லை.




ஆதியாகமம் 10:5இல், பின் அந்தந்த ஜாதிகளின் பாஷைப்படி தேசங்களும்

ஆதியாகமம் 10:25இல், சேமின் சந்ததியில் பேலேகு என்பவருடைய காலத்தில் பூமி கண்டங்களாகப் பகுக்கப்பட்டது. ஆக, தேவனுடைய வேதத்தில் நமக்குத் தேவையான எல்லாக் காரியங்களும் அருமையாக கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்து, அவருக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் .

# முற்பிதாக்கள் யுகம்

இப்போது , நாம் இரண்டாம் உலகின் முதல் பிரிவான முற்பிதாக்கள் யுகத்திற்கு வருவோம். நோவாவுக்குப்பின் தேவன் சில மனிதர்களிடம் மாத்திரம் தொடர்பு வைத்திருந்தார். ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களே அந்த தேவ மனிதர்கள். முதலில் ஆதாமிலிருந்து 20வது சந்ததியும், நோவாவிலிருந்து 10வது சந்ததியுமான விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்ட சேமின் சந்ததியான ஆபிரகாமோடு தேவன் தொடர்புகொண்டார். தேவன் அவரோடு தொடர்பு கொண்டபோது ஆபிரகாமின் பின்னணி என்ன?(யோசுவா 24:2). அவர் குடும்பத்தார் வேறே விக்கிரக வணக்கமுடையவர்களாய் இருந்தார்கள். ஆனாலும் விக்கிரக வணக்கத்தில் ஆபிரகாமுக்கு ஈடுபாடில்லாததையும், அவரது உள்ளத்தையும் கண்ட தேவன் அவரை அழைத்தார். ஆதியாகமம் 11:31ல்,தேராகு தன் குமாரன் ஆபிராம், அவர் மனைவி சாராய், தன்பேரன் லோத்தையும் அழித்துக்கொண்டு கானான் தேசம்போகப் புறப்பட்டான். ஆரான் மட்டும் வந்தபோது அங்கே இருந்துவிட்டார்கள். ஆதியாகமம் 12:1,2 ல், தேராகு மரித்தபின் தேவன் மீண்டும் அவர்களைப் புறப்படச் செய்தார்.ஆக, இவரை தேவன் இரண்டு முறை அழைத்ததை மனதில்

கொள்ளவேண்டும்.

பின் ஆபிரகாமுக்கு 99 வயதானபோது தேவன்(ஆதியாகமம் 17:1) சாராளுக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்று சொல்லும்போது சாராள் மட்டும் நகைத்ததாகவும், ஆபிரகாம் நகைக்கவில்லை என அநேகர் நம்புகின்றனர். ஆனால் **ஆதியாகமம் 17:17**

'ஆபிரகாம் வெட்கத்தினால் முகங்குப்புற விழுந்து நகைத்து"

என வாசிக்கிறோம். ஆனாலும் அவருடைய விசுவாசம் சிறிய கடுகு விதைபோன்று வளர ஆரம்பித்து, பின் தேவனுடைய எல்லா வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிந்து தன் ஒரே பேறான குமாரன் ஈசாக்கை பலியிடும் அளவிற்கு உயர்ந்தது.

ஆதியாகமம் 22:5ல், தேவன் ஆபிரகாமிடம் ஈசாக்கை பலியிடச் சொல்லியிருந்தும் 'மீண்டும் திரும்பி வருவோம்" என விசுவாசித்தார். எவ்வாறு இப்பேர்ப்பட்ட விசுவாசம் அவருக்கு வந்தது? தன்னுடைய வாழ்க்கையில் தன் குமாரன் பிறப்பு முதற்கொண்டு நடந்த எல்லாக் காரியங்களையும் நினைவுகூர்ந்து, திரும்பவும் தேவன் தன் மகனைத் தருவார் என உறுதியாக விசுவாசித்தார்.



**ஆதியாகமம் 22:12**

'உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால், நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்போது அறிந்திருக்கிறேன்"

தேவன் ஆபிரகாமை முழுமையாக சோதித்தபின்பு,

**ஆதியாகமம் 22:16,17**

'உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்கள் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகப் பண்ணுவேன். உன் சந்ததிக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"

இதனுடைய பொருள் என்ன? வானத்தின் நட்சத்திரம் போல ஒரு சந்ததி என்றால் பரலோக ஆசீர்வாதம் பெறப்போகிற சந்ததியைக் குறிக்கும். பின்பு கடற்கரை மணலைப்போல சந்ததி என்றால் பூமிக்குரிய ஆசீர்வாதம் பெறப்போகிற சந்ததி ஆவர்.



ஆக, ஆபிரகாமின் சந்ததியில் இந்த இரு ஆசீர்வாதம் பெறப்போகும் ஜனங்கள் யார் என்று ஆராய்வோமா? இந்த இரண்டு சந்ததிமூலம்தான் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படவேண்டும்(ஆதியாகமம் 22:18). இவ்விரு சந்ததியும் ஆட்சிசெய்யும் அதிகாரம் பெற்றிருந்தால் மட்டுமே, அகில ஜனங்களையும் ஆசீர்வதிக்கமுடியும். இந்த ஆசீர்வாதமான அரசாட்சிக்காலம் மூன்றாம் உலகத்தில் முதல்பகுதியான ஆயிரவருட அரசாட்சியில் நடக்கும்(2பேதுரு 3:13).அதற்கு முன்பாக இவ்விரு சந்ததிகளையும் ஆட்சி செய்யத்

தகுதியுள்ளவர்களாக தேவன் முதலில் ஆயத்தம் செய்யவேண்டும். ஆகவே, தேவன் இரண்டாம் உலகில் முற்பிதாக்கள் யுகத்தைத் தொடர்ந்து, இரு முக்கியமான யுகங்களைத் தம் மேலான தெய்வீகத் திட்டத்தில் வைத்துள்ளார்.

1. யூத யுகம் 2. சுவிசேஷயுகம்(கிறிஸ்தவர் யுகம்)

1. யூத யுகம் - யாக்கோபின் மரணம் துவக்கி கிபி 70 வரை

இயேசுகிறிஸ்துவின் முக்கியமான ஒரு வார்த்தையை நாம் கவனிக்கவேண்டும்.

**மத்தேயு11:11**

'ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன்
ஒருவனும் எழும்பினதில்லை. ஆகிலும் பரலோக இராஜ்யத்தில்
சிறியவனாயிருக்கிறவன் அவரிலும் பெரியவனாயிருக்கிறானென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன்"

பரலோக ஆசீர்வாதம் பெறும் சந்ததியில் சிறியவனாயிருக்கிறவன் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவனாயிருப்பான் எனும்போது, ஆபேல் முதல் யோவான் ஸ்நானகன் வரை உள்ள பிதாக்கள்(லூக்கா16:16) அல்லது நீதிமான்கள் பூமிக்குரிய ஆளுகை செய்யும் ஆசீர்வாதம் பெறுவர்.ஏனெனில் அநேக வகையில் தேவன் அவர்களை தகுதியாக்கினார்.

**சங்கீதம் 45:16**

'உமது பிதாக்களுக்கு பதிலாக குமாரர் இருப்பார்கள்.
அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்"

இங்கு உமது என்பது நம் கர்த்தரையும், பிதாக்கள் என்பது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு , தாவீது போன்ற தீர்க்கதரிசிகளையும் குறிக்கும். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இவர்கள் அனைவரும் நித்தியஜீவனை அளிக்கும் நித்திய பிதாவாகிய கிறிஸ்துவினால் ஜீவன்பெறும்போது, அவர்கள் அவருக்கு குமாரராகி, பூமியெங்கும்ஆயிரவருட அரசாட்சியில் பிரபுக்களாக இருப்பர். அதில் முதல் ஸ்தானத்தில், கர்த்தர் கூறியபடி யோவான் ஸ்நானகன் இருப்பார்(மத்தேயு 11:11). பழையஏற்பாட்டுக் காலத்தில் ஜீவித்த இவர்களுக்கு பரலோக வாய்ப்புப் பற்றி தேவன் எவ்விடத்திலும் உரைக்கவில்லை. பூமிக்குரிய ஆசீர்வாதமே தருவதாக ஆபிரகாம், தாவீது, இஸ்ரயேல் ஜனங்கள் போன்றவர்களுக்கு வாக்களித்து, அவர்களுக்கு இவ்வுலகில் அநேக ஐசுவரியங்களைத் தந்தார்(ஆமோஸ்2:2, யாத்திராகமம் 19:5,6, ஆதியாகமம் 24:1).

இவர்கள் அனைவரும் தேவராஜ்யம் துவங்கும்வரையில் பூமியின் தூளில் மரித்தநிலையில் இருப்பர். ஆக, கடற்கரை மணலைப்போல உன் சந்ததி இருக்கும் என்பது, பிதாக்கள் மற்றும் மாம்சீக இஸ்ரயேலரைக் குறிக்கும்(ஓசியா 1:10,யோவான் 4:22). இஸ்ரயேல் ஜனங்களில் முற்பிதாக்களை தேவன் எல்லாவகையிலும் சோதனைசெய்து, தகுதியாக்கி, தயாராக வைத்திருக்கிறார்- சங்கீதம் 45:16, எபிரேயர் 11:35(அதிகாரம் முழுவதும் வாசிக்கவும்). இதற்காகத்தான் தேவன் யூதயுகத்தை தம் திட்டத்தில் வைத்தார். அவர்களிடம் மாத்திரம் இந்த யுகத்தில் தொடர்புகொண்டார்.இந்த யுகம் சம்பந்தமாக உள்ள இன்னும் அநேக சத்தியங்களைத் தொடர்ந்து வரும் பாடங்களில் விளக்கஉள்ளோம்.

இப்போது நாம் சுவிசேஷயுகத்திற்கு வருவோம்.

## 2. சுவிசேஷயுகம்

இயேசுவின் முதலாம் வருகை தொடங்கி அவருடைய இரண்டாம் வருகை உள்ள காலப்பகுதியே சுவிசேஷயுகம் அல்லது கிறிஸ்தவர் யுகம் ஆகும். இந்த யுகத்தில்தான் ஆபிரகாமின் சந்ததியில் பரலோக வாய்ப்புப்பெறும் வானத்தின் நட்சத்திரங்கள் போன்ற சந்ததி தெரிந்தெடுக்கப்படவுள்ளது. கர்த்தர் இந்த வாய்ப்பினையும் முதலில் இஸ்ரயேலர்களுக்கே தந்தார். குறிப்பிட்ட சிலரைத்தவிர(அதாவது 12 சீஷர்கள் மற்றும் சில சீஷர்கள் தவிர) முழு தேசமாக அவர்கள் கர்த்தரை நிராகரித்தனர். அவ்வேளையில்தான் யூதயுகம் கிபி 70ல் முடிவுக்கு வந்தது.

**மத்தேயு 23:37,38**

'உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்"

பின் இந்த பரலோக வாய்ப்பை உலகிலுள்ள மற்ற எல்லா புறஜாதி ஜனங்களுக்கும் பாரபட்சமின்றி தேவன் இந்த சுவிசேஷயுகத்தில் தந்துள்ளார். யாரெல்லாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளில் மாறாது நடக்கின்றார்களோ, அவர்களுக்கே இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறதே தவிர, வெறுமனே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு இது தரப்படுவதில்லை.

**கலாத்தியர் 3:16** ல் , ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் செய்த சந்ததியைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் விளக்கும்போது, **'அந்த சந்ததி கிறிஸ்துவே"** என வாசிக்கிறோம். அது மட்டுமல்ல,

**கலாத்தியர் 3:28,29**

'நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயுமிருக்கிறீர்கள்"

என பவுல் அப்போஸ்தலன் தெளிவாக உரைக்கிறதைப்பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

எபேசியர் 3:6ல், புறஜாதிகளும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகும் மேலான வாய்ப்பு அருளப்பட்டிருக்கிறது. இவர்களை தேவன் இந்த சுவிசேஷயுகம் முழுவதும் தெரிந்தெடுத்து, அவர்களை இவ்வுலகில் எல்லா வகையிலும் முற்பிதாக்களைப்போலவே தகுதியாக்கினபின்பே பரலோக வாய்ப்பைப் பெறுவர்(எபிரேயர் 4:15ல் வாசிக்கவும்).

**வெளிப்படுத்தல் 5:9,10**

'எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்,
நாங்கள் பூமியில் அரசாளுவோம் என புதிய பாட்டைப் பாடினார்கள்"

மேலும்

**வெளிப்படுத்தல் 20:6**

'முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும்
பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக
ஆசாரியராயிருந்து அவரோடுகூட ஆயிரவருஷம் அரசாளுவார்கள்"

ஆக பரலோக வாய்ப்பைப் பெறும் உண்மையான கிறிஸ்தவர்கள் மாம்சத்திலும்,

இரத்தத்திலுமாலான இச்சரீரத்தில் பரலோகம் செல்லமுடியாது.

**1கொரிந்தியர் 15:50**

‘ மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாதே”

எனும் தேவனுடைய வார்த்தைகளே இதற்குச் சாட்சியமாயிருக்கிறது. இவர்களுக்கு தேவன், கிறிஸ்துவைப்போலவே ஆவிக்குரிய மற்றும் மகிமையின் சரீரம் தருவதால் மட்டுமே இவர்கள் பரலோகம் செல்லமுடியும்.

**பிலிப்பியர் 3:21**

‘நம்முடைய அற்பமான சரீரத்தை மகிமையுள்ள சரீரமாக மாற்றுவார்”

இப்படியாக, தேவன் இந்த யுகத்தில் கிறிஸ்தவர்களிடம் மாத்திரமே தொடர்பு கொள்கிறாரே தவிர, இஸ்ரயேலரிடமோ(ரோமர்11:25), மற்ற உலகத்தின் ஜனங்களிடமோ தொடர்புகொள்வதில்லை. உலக மக்களிடம் தேவன் ஆயிரமாண்டு அரசாட்சியில் மட்டுமே தொடர்புகொள்ள இருக்கிறார் (ஏசாயா 26:9).

இவ்வாறு ஆபிரகாமின் இந்த இருவகையான சந்ததியும் தகுதியடைந்தவுடன், அவர்களுக்கு மூன்றாம் உலகில் ஆளுகை தரும்பொருட்டு, இந்த இரண்டாம் உலகத்தை தேவன் முடிவுக்குக் கொண்டுவருவார்.

**2பேதுரு 3:10**

‘வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம்.
பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்”

**2பேதுரு 3:7**

‘இப்போது இருக்கிற வானங்களும் பூமியும்
அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது”

என வாசிக்கிறோமே. இங்கு வானங்கள் என்பது சாத்தானையும், அவனுடைய அதிகாரத்தில் இருக்கும் விழுந்துபோன தூதர்களின் அதிகாரத்தையும் குறிக்கும். பூமி என்பது சாத்தானின் அதிகாரத்தின் கீழிருக்கும் அமைப்புகளைக் குறிக்கும். பூதங்கள் வெந்து உருகிப்போம் என்பது, இவ்வுலகில் உள்ள நான்கு தூண்களாகிய அரசியல், சமுதாயம், பொருளாதாரம், மதம் - ஆகியவைகளாகும். இந்நான்கிலும் அநீதி அநியாயமே உள்ளது. இனி இவை ஒருபோதும் பூமியிலிராதபடி அழிக்கப்படும். அக்கினி என்பதுகூட அருமையான அடையாளமொழியில் முழுமையான அழிவைக் குறிக்கும். சாத்தானுடைய ஆட்சியின் கீழுள்ள அமைப்புகளெல்லாம் முற்றிலும் அழிந்தபின்(செப்பனியா 3:8), **2பேதுரு 3:13** -ல் கூறியுள்ளபடி,

‘நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும்”

இதுபற்றி அடுத்த பாடத்தில் விரிவாகப் பார்ப்போம். அதுவரை

தேவனுடைய கிருபை நம் அனைவரோடும்கூட இருப்பதாக ஆமென .

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/